செய்தி வெளியீடு எண்: 021 நாள்: 05.01.2018

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 4.1.2018 அன்று தலைமைச் செயலகத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில் சென்னை நேரு பல்நோக்கு உள்விளையாட்டரங்க வளாகத்தில் 1 கோடியே 90 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மின்னொளி வசதியுடன் அமைக்கப்பட்டுள்ள திறந்தவெளி சறுக்கு வளையத்தினை (Outdoor Skating Rink) விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்கள்.

அகில இந்திய அளவிலும், பன்னாட்டு அளவிலும் நடைபெறும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் தமிழகத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பங்கு கொண்டு வெற்றி வாகை சூடும் வகையில் அவர்களுக்கு உரிய பயிற்சி அளித்தல், உயரிய ஊக்கத் தொகை வழங்குதல், சர்வதேச அளவில் பங்கு பெறும் விளையாட்டு வீரர்களுக்கு நிதியுதவி அளித்தல், மாணவர்கள் தங்கி விளையாட்டில் பயிற்சி பெற விளையாட்டு விடுதிகள் ஏற்படுத்துதல், கிராமப்புற விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் வகையில் கிராம விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல், மாவட்ட விளையாட்டு மைதானங்களை மேம்படுத்துதல், பாரம்பரிய விளையாட்டுகளை ஊக்குவித்தல் போன்ற பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு எடுத்து வருகிறது.

அந்த வகையில், சென்னை நேரு பல்நோக்கு உள்விளையாட்டரங்க வளாகத்தில் பன்னாட்டு அளவிலான போட்டிகளை நடத்துவதற்கு ஏதுவாக 1 கோடியே 90 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மின்னொளி வசதியுடன் அமைக்கப்பட்டுள்ள திறந்தவெளி சறுக்கு வளையத்தை (Outdoor Skating Rink) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள். தமிழ்நாட்டில் முதன்முறையாக சிந்தட்டிக் (Synthetic) மேற்பரப்பினால் அமைக்கப்பட்டுள்ள இந்த சறுக்கு வளையம் 200 மீட்டர் சுற்றளவு கொண்டதாகும். இவ்வளையத்தில் ஸ்பீடு, ஆர்ட்டிஸ்ட்டிக் மற்றும் ஹாக்கி ஆகிய பிரிவுகளில் பல்வேறு வயது பிரிவினருக்கும் போட்டிகள் நடத்தலாம். இங்கு பயிற்சி பெறும்போது சறுக்கு விளையாட்டில் வேகமும்,

உறுதியும் அதிகரிக்கும். இதன் மூலம் தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் பெருமளவில் தேசிய மற்றும் பன்னாட்டு அளவில் நடைபெறும் போட்டிகளில் கலந்து கொண்டு பதக்கங்கள் வெல்லும் வகையில் தங்கள் திறனை மேம்படுத்திக் கொள்ள இயலும்.

இந்த நிகழ்ச்சில், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.பி. பாலகிருஷ்ணா ரெட்டி, தலைமைச் செயலர் (முழு கூடுதல் பொறுப்பு) திரு.க.சண்முகம், இ.ஆ.ப, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை முதன்மைச் செயலாளர் திரு. தீரஜ் குமார், இ.ஆ.ப, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், இ.ஆ,ப, ஆகியோர் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**